**31.10.2007 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட வேண்டியது**

## சுருக்கம்

ஆட்சி எல்லை – திண்டுக்கல் மாவட்டம் – திண்டுக்கல் வட்டத்தைச் சீரமைத்து ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் (வ.நி.1(1))துறை

அரசாணை (நிலை) எண். 637 நாள். 31.10.2007

படிக்க:

1. திண்டுக்கல் மாவட்டாட்சியரின் கடித எண். ந.க.எண். 25144/2000 பி2 நாள். 18.8.2006.

2. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண். பணி.6(4)/63216/2006 நாள். 28.8.2006.

-----

ஆணை:–

மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) சட்டம்) அவர்கள் 8.8.2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கீழ்க்காணும் அறிவிப்பினை வழங்கினார்கள்:–

> **"திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தை பிரித்து ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக எல்லை வரையறை ஆணையத்தை அணுகி மாவட்டம், வட்டங்கள் பிரிப்பது குறித்து அனுமதி பெறப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."**

மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைப்பது குறித்து விரிவான அறிக்கை அனுப்புமாறு முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

2. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, தற்போதைய திண்டுக்கல் வட்டத்திலிருந்து சில வருவாய் கிராமங்களைப் பிரித்து, புதிய ஆத்தூர் வட்டத்தை உருவாக்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் ஆத்தூர் வட்டம் 1.11.2007 முதல் செயல்படும். சீரமைப்பிற்குப் பின் இந்த இரு வட்டங்களும் பின்வருமாறு அமையும்:–

| வட்டம் | குறுவட்டம் |
|---|---|
| 1. திண்டுக்கல் | 1. திண்டுக்கல் வடக்கு<br>2. திண்டுக்கல் தெற்கு<br>3. கம்பிளியம்பட்டி<br>4. சாணார்பட்டி<br>5. சிலுவத்தூர். |
| 2. ஆத்தூர் | 1. ஆத்தூர்<br>2. சின்னாளபட்டி<br>3. தருமத்துப்பட்டி<br>4. பலக்கனூத்து<br>5. ரெட்டியார் சத்திரம் |

3. இந்த ஆணையின் இணைப்பு 1–ல் குறிப்பிட்டுள்ள அறிவிக்கை 31.10.2007 நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு இதழில் வெளியிடப்படும்.

4. புதிய ஆத்தூர் வட்டத்திற்கு இந்த ஆணையின் இணைப்பு–2 குறிப்பிட்டுள்ளவாறு 15 புதிய பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. இப்பணியாளர்கள், தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதரப் படிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்கள். மேலும் மேற்படி இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு திண்டுக்கல் வட்டத்திலிருந்து புதிய ஆத்தூர் வட்டத்திற்கு மறு பணியமர்த்தல் (Redeployment) மூலம் மாற்றப்படும் 29 பணியாளர்கள் உடனடியாக புதிய வட்டத்தில் பணி ஏற்பர். அவர்களுடன், தளவாடம் மற்றும் இதரப் பொருட்களும் மாற்றப்பட வேண்டும்.

5. புதிய ஆத்தூர் வட்டாட்சியருக்கு ஈப்பு வழங்குவதற்காக தொடராச் செலவினமாக ரூ.5.00 இலட்சமும், இதற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் தொடரும் எரிபொருள் செலவினம் ரூ.48,000/–க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

6. ஆத்தூர் வட்ட அலுவலகத்திற்கு மரத் தளவாடங்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூ.2.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

7. எதிர்பாரா ஆரம்ப செலவினமாக (Start-up Expenditure) மிதிவண்டி, சுவர்கடிகாரம், பணப்பெட்டி முதலான வாங்குவதற்கு ரூ.10,000/–க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

8. பின்வரும் அலுவலகப் பொருட்களை, புதிய ஆத்தூர் வட்டத்திற்கு இலவசமாக வழங்குமாறு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:–

| | | |
|---|---|---|
| (i) மின்சாரத்தால் இயங்கும் படிப் பெருக்கி இயந்திரம் | : | 1 |
| (ii) எண் குறியீடு இயந்திரம் | : | 1 |
| (iii) எழுதுபொருட்கள், தேவைப்படும் படிவங்கள் மற்றும் அரசிதழ்கள் | : | தேவையானவை |
| (IV) உலோக சீல் (முத்திரை) | : | 1 |
| (V) ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரம் | : | 1 |

9. ஆத்தூர் வட்ட அலுவலகத்திற்காக புதிய கட்டிடம் கட்டப்படும் வரை, பொதுப் பணித்துறை விதிகளின்படியும், அரசு ஆணை நிலை எண். 329, நிதி (சம்பளம்) துறை நாள். 30.8.2001–ன் படியும் வாடகை நிர்ணயம் செய்து கொள்ள அரசு ஆணையிடுகிறது.

10. ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு, நீட்டிப்புடன் (With Extension) கூடிய ஒரு தொலைபேசியும், வட்டாட்சியரின் இருப்பிடத்திற்கு ஒரு தொலைபேசியும் அமைப்பதற்கு, ஆண்டொன்றிற்கு ரூ.18,000– (ரூபாய் பதினெட்டு ஆயிரம் மட்டும்) மற்றும் வைப்பு தொகையாக (Deposit) ரூ.3,000/– க்கு அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. இது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. மேற்கூறிய செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:–

(அ) 01 01 பணியாளர் சம்பளங்கள் ரூ. 5.94 இலட்சம்

" 2053 00 – மாவட்ட நிருவாகம் –094 ஏனைய பணியாளரமைப்பு – I - திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01. சம்பளங்கள் "
(கு. தொ.கு. 2053 00 094 AB 0102)

(ஆ) 05 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.3000/– தொடராச் செலவினம் ரூ.6000/– தொடரும் செலவினம்

"05 அலுவலக செலவுகள் – 01 தொலைபேசிக் கட்டணங்கள்"
(கு. தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) 05 02 அலுவலகச் செலவுகள் ரூ.10,000/–

"05 அலுவலக செலவுகள் – 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"
(கு. தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) 05 05 அறைகலன்கள் ரூ. 2.00/– இலட்சம்

" 05 அலுவலக செலவுகள் – 05 அறைகலன்"
(கு. தொ.கு. 2053 00 094 AB 0559)

(உ) 21 01 மோட்டார் வண்டிகள் ரூ.5.00/–இலட்சம்

" 21 மோட்டார் வண்டிகள்–01 வாங்குதல்"
(கு. தொ. கு. 2053 00 094 AB 2119)

(ஊ) 45 00 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ.16,000/–

" 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்"
(கு.தொ.கு.2053 00 094 AB 4500)

12. மேற்கண்ட செலவினங்களை பெற்று வழங்குவதற்கு, திண்டுக்கல் மாவட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. வட்ட அலுவலகத்திலிருந்து பெறப்படும் பணப் பட்டியல்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய சம்பந்தப்பட்ட சார் நிலை கருவூல அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு திண்டுக்கல் மாவட்ட கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் புது பணிகள் (New Service) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1)த்துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13. இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண். 133/DS(RC) நிதி(வருவாய்)/2007, நாள். 31.10.2007 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 1184 (A.S.L.No.1184) (ஆயிரத்து நூற்று எண்பத்தி நான்கு)இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

அம்புஜ் சர்மா
அரசுச் செயலாளர்

பெறுநர்

## இணைப்பு-1

### அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள திண்டுக்கல் வட்டத்தைப் பிரித்து 2007ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஒன்றாம் நாளிலிருந்து ஆத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆத்தூர் வட்டமொன்று, கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிய ஆத்தூர் வட்டத்தில் உள்ளடங்கும் 1.ஆத்தூர் 2. சின்னாளபட்டி 3.தருமத்துப்பட்டி 4. பலக்கனூத்து 5. ரெட்டியார் சத்திரம் ஆகிய குறுவட்டங்கள் மீது, தற்போது திண்டுக்கல் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள், இனி ஆத்தூர் வட்டாட்சியரால் 2007ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஒன்றாம் நாளிலிருந்து கையாளப்படும்.

| வ.எண். | குறுவட்டத்தின் பெயர் | வருவாய் கிராமங்களின் பெயர் |
|---|---|---|
| 1. | ஆத்தூர் | போடிகாமன்வாடி<br>சீவல்சரகு<br>நரசிங்கபுரம்<br>ஆத்தூர்<br>பாளையங்கோட்டை<br>பாறைப்பட்டி<br>சித்தரேவு<br>அய்யம்பாளையம்<br>மணலூர் |
| 2. | சின்னாளபட்டி | கீழக்கோட்டை<br>தொப்பம்பட்டி<br>முன்னிலைக்கோட்டை<br>அம்பாத்துரை<br>வீரக்கல்<br>கும்மம்பட்டி<br>வக்கம்பட்டி<br>பித்தளைப்பட்டி<br>என். பஞ்சம்பட்டி<br>ஆலமரத்துப்பட்டி<br>கலிக்கம்பட்டி<br>பிள்ளையார் நத்தம் |
| 3. | தருமத்துப்பட்டி | பழைய கன்னிவாடி<br>சத்திரப்பட்டி<br>புன்றிமலை<br>ஆடலூர்<br>சிந்தலக்குண்டு<br>தாமரைக்குளம்<br>கசவனம்பட்டி |
| 4. | பலக்கனூத்து | நீலமலைக்கோட்டை<br>கோடல்வாவி |

| | | |
|---|---|---|
| | | காமாட்சிபுரம்<br>பலக்கனூத்து<br>தோனிமலை<br>சிரங்காடு<br>தெத்துப்பட்டி<br>கன்னிவாடிமலை |
| 5. | ரெட்டியார் சத்திரம் | கே. புதுக்கோட்டை<br>அழகுபட்டி<br>மாங்கரை<br>அம்மாபட்டி<br>கொத்தப்பள்ளி<br>சில்வார்பட்டி<br>குருநாதநாயக்கனூர்<br>கள்ளொறும்பு<br>குட்டத்துப்பட்டி |

அம்புஜ் சர்மா
அரசுச் செயலாளர்

**Annexure-2**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| Name of the post | posts in Dindigul | Norms for taluks having 3 to 6 firkas | Posts to be retained in Dindigul | To be redeployed to Athur | To be created in Athur | Total posts in Athur |
| Tahsildar | 1 | 1 | 1 | 1* | 0 | 1 |
| DRS Tahsildar * | 1* | 0 | 0 | 0 | 0 | 0 |
| Tahsildar Civil Supplies ** | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| HQDT* | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Zonal DT Cadre | 3 | 1 | 1 | 1 | 0 | 1 |
| TSO (DT Cadre) | 0 | 1 | 1 | 1 | 0 | 1 |
| Assisstant/1R1 for each firka/1 for election | 21 | 12 | 12 | 9 | 3 | 12 |
| Junior Assistant | 4 | 4 | 4 | 0 | 4 | 4 |
| Special RI (Civil Supplies) | 6 | 1 | 3 | 3 | 0 | 3 |
| Typist | 2 | 1 | 1 | 1 | 0 | 1 |
| Jeep Driver | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Record Clerk | 3 | 1 | 2 | 1 | 0 | 1 |
| Office Assistant | 14 | 8 | 8 | 6 | 2 | 8 |
| Masalchi | 2 | 1 | 1 | 1 | 0 | 1 |
| Night Watchman | 0 | 1 | 0 | 0 | 0 | 0 |
| Deputy Inspector of Survey | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Sub-Inspector of Survey | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Senior Draftsman | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Junior Draftsman | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Field Assistant | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| Firka Surveyor | 10 | 5 | 5 | 5 | 0 | 5 |
| Total | 75 | 43 | 45 | 29 | 15 | 44 |

* As per norms for taluks with 3-6 Firkas, no separate DRS Tahsildar or HQDT post has to be provided, while they are eligible for only one post of Zonal DT. At present 3 DT post are available in composite Dindigul taluk. Hence these posts which are available in composite taluk are suggested for redeployment at similar corresponding levels in the new taluk.

** For the bifurcated taluk the TSO post is of the level of DT. Hence one post of Tahsildar reported to be available in composite Dindigul taluk may be disbanded and two TSO posts one for each new taluk accommodated at DT level.

**Ambuj sharma**
**Secretary to Government**